வழிகாட்டல்கள், நெறிமுறைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும், பலவகையான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இத்தகைய சூழ்நிலையில், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை, உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலை ஏற்று, என்ன மாதிரியான கட்டணங்களை வரைமுறை செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(ஆ) திருக்கோவிலூர் தொகுதியில் அரசு மணல் குவாரிகளின் விதிகளை மீறி மணல் அள்ளுவதைத் தடுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மணல் குவாரிகளில் அரசு விதிமுறைகள் மீறப்பட்டு குடிநீர் ஆதாரப் பகுதிகளிலும், பாலப் பகுதிகளிலும் மணல் எடுக்கப்படுகிறது. நேற்றுகூட இதுபற்றி ஊடகங்களிலே செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதன்மீது அரசு என்ன கொள்கை வைத்திருக்கிறது என்பது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறகு பதிலைச் சொல்லலாம்.*

(ஒ) பல்கலைக்கழகங்களில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தற்காலிகப் பணியாளர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலும், பாரதியார் பல்கலைக்கழகத்திலும் வேளாண்மைத் துறையில்* ATMA *என்ற அடிப்படையிலும், பாரதியார் பல்கலைக்கழகத்தில் தற்காலிக அடிப்படையில் எடுக்கப்பட்ட பணியாளர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை. இதனால் அவர்களை நிரந்தரம் செய்கின்றபோது இடையூறாக இருக்கும். எனவே, தற்காலிகப் பணியாளர்களைப் பணிக்கு எடுக்கும்போதும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களை எடுக்க வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*